Date : 12.03.2026

SC.No. : 65/2016

PW : 9

Name : மருத்துவர். காளிரத்தினம்

அரசுதரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சிக்கு அனுமதிக்கப்படுகிறார்.

<u>**முதல் விசாரணை தொடர்ச்சி :**</u>

1. நான் கடந்த 24.01.2015 தேதியன்று மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் பணியில் இருந்தபோது 63 வயது ஆண் சண்முகம் என்பவருக்கு சிகிச்சை அளித்து நான் வழங்கிய காயச்சான்றிதழ் என்னிடம் காட்டப்படுவது தான். அந்த **காயச்சான்றிதழ் நகல் அ.த.சா.ஆ.12** ஆகும். (எதிரி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). இந்த ஆவணத்தின் அசலானது அரசு உத்தரவுபடி 6 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆவணம் என்பதால் அழிக்கப்பட்டுவிட்டது. அது தொடர்புடைய **அரசு உத்தரவு அ.த.சா.ஆ.13** ஆகும்.

2. அதே சம்பவத்தில் காயம்பட்ட 13 வயதுடைய பெண் சிவரஞ்சனி என்பவருக்கு என்பவருக்கு சிகிச்சை அளித்து நான் வழங்கிய காயச்சான்றிதழ் என்னிடம் காட்டப்படுவது தான். அந்த **காயச்சான்றிதழ் நகல் அ.த.சா.ஆ.14** ஆகும். (எதிரி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). இந்த ஆவணத்தின் அசலானது அரசு உத்தரவுபடி 6 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆவணம் என்பதால் அழிக்கப்பட்டுவிட்டது.

3. 2. அதே சம்பவத்தில் காயம்பட்ட 15 வயதுடைய ஆண் செல்வகணபதி என்பவருக்கு என்பவருக்கு சிகிச்சை அளித்து நான் வழங்கிய காயச்சான்றிதழ் என்னிடம் காட்டப்படுவது தான். அந்த **காயச்சான்றிதழ் நகல் அ.த.சா.ஆ.15** ஆகும். (எதிரி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). இந்த ஆவணத்தின் அசலானது அரசு உத்தரவுபடி 6 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆவணம் என்பதால் அழிக்கப்பட்டுவிட்டது.

4. அதே சம்பவத்தில் காயம்பட்ட 33 வயதுடைய பெண் ஜெயமணி என்பவருக்கு என்பவருக்கு சிகிச்சை அளித்து நான் வழங்கிய காயச்சான்றிதழ் என்னிடம் காட்டப்படுவது தான். அந்த **காயச்சான்றிதழ் நகல் அ.த.சா.ஆ.16** ஆகும். (எதிரி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). இந்த ஆவணத்தின் அசலானது அரசு உத்தரவுபடி 6 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆவணம் என்பதால் அழிக்கப்பட்டுவிட்டது. மேற்படி நான்கு நபர்களுக்கும் ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் ஆகும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். காயம்பட்ட சண்முகத்திற்கு ஏற்பட்ட காயமானது அருவாளால் ஏற்பட வாய்ப்பில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

என்னிடம் காட்டப்பட்ட அ.த.சா.ஆ.12 முதல் 16 வரையான ஆவணங்கள் எப்படி எனக்கு கிடைக்கப்பெற்றது என்றால் இந்த கேள்விக்கு பதில் கூற இயலவில்லை. நான் இன்று நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வரும்போது அ.த.சா.ஆ.12 முதல் 16 வரையான ஆவணங்கள் கொண்டு வந்தேனா என்றால் இல்லை.

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.12 17:48:41 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**